*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.493/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.முருகன் த/பெ. வையாபுரி***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.08.2024.**

துவக்க நேரம் 12.08

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தலைவாசலில் உள்ள சிறுவாச்சூரில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்த ருக்மணி, எனது அக்கா ஆவார். கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள், மாலை சுமார் 07.00 மணியளவில் தெடாவூரிலிருந்து செந்தாரப்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் நானும், எனது மனைவி மற்றும் எனது அக்காவும் சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது எங்களுக்கு பின்பக்கமாக வந்த Hero Honda Splendar இருசக்கர வாகனம், எங்கள்மீது மோதிவிட்டது. அதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு வலதுபக்க தலை, கை, கால், இடுப்பு ஆகிய இடங்களில் அடிபட்டுவிட்டது. எனது மனைவிக்கு வலதுகை மணிக்கட்டில் எலும்பு முறிவும், தலை மற்றும் நெற்றியிலும் காயம் ஏற்பட்டது. எனது அக்காவிற்கு பின்பக்க தலையில் பலத்த அடிபட்டுவிட்டது, வாயிலும், மூக்கிலும் இரத்தம் வந்தது.

3) ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார். விபத்து ஏற்படுத்திவிட்டு இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஆஜர் எதிரி சென்றுவிட்டார். அவரது பெயர் பீமன் என்று அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

4) அக்கம் பக்கம் இருந்தவர்கள் எங்களை தெடாவூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். அங்கிருந்து ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கும் கூட்டிச்சென்றார்கள். எனது அக்காவை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். சிகிச்சை பலனின்றி எனது அக்கா அங்கு 3 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். சேலம் தனியார் மருத்துவமனையில் நானும், எனது மனைவியும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம்.

5) நடந்த சம்பவத்தை குறித்து சேலம் மருத்துவமனையில் வைத்து, கெங்கவல்லி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 12.18

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.493/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.சாந்தி க/பெ. முருகன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.08.2024.**

துவக்க நேரம் 12.19

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தலைவாசலில் உள்ள சிறுவாச்சூரில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்த ருக்மணி, எனது கணவரின் அக்கா ஆவார். கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள், மாலை சுமார் 07.00 மணியளவில் தெடாவூரிலிருந்து செந்தாரப்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் நானும், எனது கணவர் முருகன் மற்றும் எனது கணவரின் அக்கா ருக்மணி ஆகியோர்கள் சென்றுகொண்டிருந்தோம். எனது கணவர் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினார்.

2) அப்போது எங்களுக்கு பின்பக்கமாக வந்த இருசக்கர வாகனம், எங்கள்மீது மோதிவிட்டது. அதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு வலதுபக்க தலை, நெற்றி, கை ஆகிய இடங்களில் அடிபட்டுவிட்டது. எனது கணவருக்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது கணவரின் அக்காவிற்கு பின்பக்க தலையில் பலத்த அடிபட்டுவிட்டது, மூக்கிலும் இரத்தம் வந்தது.

3) ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார். விபத்து ஏற்படுத்திவிட்டு இருசக்கர வாகனத்தை

எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஆஜர் எதிரி சென்றுவிட்டார். அவரது பெயர் கலியன் என்று அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

4) அக்கம் பக்கம் இருந்தவர்கள் எங்களை தெடாவூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். அங்கிருந்து ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கும் கூட்டிச்சென்றார்கள். எனது கணவரின் அக்காவை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். சிகிச்சை பலனின்றி ருக்மணி அங்கு 3 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். சேலம் தனியார் மருத்துவமனையில் நானும், எனது கணவரும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலிசார், என்னிடம் நடந்த விபத்து குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 12.26

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.